மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

04.08.2022 வியாழக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினர்

## அம்பலப்படுத்தினார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (03) இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சர்வ கட்சி அரசாங்கத்தினை அமைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் மக்களின் நலன்சார்ந்த 10 முக்கிய விடயங்களை நிறைவேற்றுமாறு கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர். இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் வெளியிட்டுள்ளதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார். இதன்போது கருத்து வெளியிட்ட சிறிதரன், ஜனாதிபதி தெரிவின் போது கூட்டமைப்பினர் டலஸ் அழகப்பெருவிற்கு வாக்களித்திருந்தமையினை சுட்டிக்காட்டியிருந்தார். எனினும் இதனை பொருட்படுத்தாமல் தங்களது கோரிக்கையினை நிறைவேற்றவுள்ளமையினை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார். இதனை எம்.ஏ சுமந்திரன் மொழி பெயர்த்திருந்தார்.
இதன்போது பதில் வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு ஆதரவாக வாக்களித்திருந்ததாக குறிப்பிட்டார். இதன்போது, குறித்த கூட்டத்தில் பங்கேற்றிருந்த கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் காத்திருந்தனர்.அத்துடன், ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே, சர்வ கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பதனை தீர்மானிக்க முடியும் என கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டிருந்தனர்.

## நீதி மன்றினுள் துப்பாக்கி சூடு

கல்கிசை நீதி மன்றினுள் போதை பொருளுடன் தொடர்புடைய நபர் ஒருவரை விசாரித்து கொண்டிருந்து போது அங்கு வந்த நபர் நீதி மன்ற விசாரணை கூண்டில் நின்றவர் மீது துப்பாக்கி சூடு நடத்தி தப்பி சென்றுள்ளார். இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதோடு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட நபர் நீதி மன்ற கட்டிடத்துக்குள இருந்து தப்பி சென்றுள்ளதாக அறியமுடிகின்றது.

## அரச சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

அரச சேவைகள் சிலவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால்அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும் , பெட்ரோலிய உற்பத்தி, எரிபொருள் விநியோகம், சுகாதார சேவைகள் ஆகியனவும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## அடக்குமுறையின் முன்னோடி சுதந்திரமாக நடமாடுகின்றார்

அமைதியாகவும்,நாகரீகமாகவும் போராட்டம் மேற்கொண்ட ஜோசப் ஸ்டாலின் போன்ற தொழிற்சங்கத் தலைவர்களை தண்டனைக்குட்படுத்தி கைது செய்வதற்கும், தற்போதைய வன்முறை சார் அடக்குமுறையின் முன்னோடியான மகிந்த ராஜபக்ஸ இன்னமும் சுதந்திரமாக வெளியே நடமாடுவதற்குமான காரணம் என்ன எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார். உழைக்கும் மக்களுக்காகவும், ஆசிரியர் சமூகத்திற்காகவும் போராடிய ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டுள்ள போது, 02



மலையகத்தில் அதிக மழையுடனான வானிலை காரணமாக அட்டன் நுவரெலியா பிரதான வீதியில் பத்தனை சந்தியில் மண்மேடு சரிந்து விழுந்தமையால் குறித்த வீதி பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. **(தலவாக்கலை பி.கேதீஸ்)**

## பேருந்து கட்டணங்களில் நள்ளிரவு முதல் திருத்தம்

பேருந்து கட்டணங்களில் இன்று (வியாழக்கிழமை) நள்ளிரவு முதல் திருத்தம் மேற்கொள்ளவுள்ளது.தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இதுகுறித்த தகவல்களை வெளியிட்டுள்ளது. அண்மையில் டீசல் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது குறித்த விலைத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. (சுமன்)

## நாட்டில் எரிவாயுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

இந்த வருட இறுதி வரை நாட்டில் எரிவாயுக்கு தட்டுப்பாடு ஏற்பட மாட்டாது என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் அடுத்த வருடத்திற்கான புதிய எரிவாயு வழங்குனர் ஒருவர் தெரிவாகியுள்ளார். எனவே அடுத்த 16 மாதங்களுக்கு எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாது என லிட்ரோ நிறுவன தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். இருப்பினும், நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் கவனம் செலுத்தி, மக்கள் எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை

நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டில் அரிசி, மா, சீனி, பருப்பு, நெத்தலி கருவாடு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக வர்த்தக அமைச்சகத்தின் செயலாளர் எஸ்.டி கொடிகார தெரிவித்துள்ளார். மேலும், அத்தியாவசியப் பொருட்களை தேவைக்கு ஏற்ப மீள் இறக்குமதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 10 பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாகஅடையாளம்காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### துப்பாக்கி சூட்டில்

## 66நாளில் 21பேர் பலி

இலங்கை யில் கடந்த மே மாதம் 30ஆம் திகதி முதல் இன்று வரை 20 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பதிவாகியுள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் மொத்தம் 21 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாச் ளர் எஸ்.எஸ்.பி நிஹால் தல்துவா தெரிவித்தார்

## அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைப்பு

பருப்பு, சீனி, கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைவடையவுள்ளதாக புறக்கோட்டை வர்த்தக சங்கத்தின் தொழிற்சங்க குழு உறுப்பினர் தேவபுரன் தெரிவித்துள்ளார். அதற்கமைய, 600 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட பருப்பு ஒரு கிலோகிராமின் மொத்த விலை 410 ரூபாயாகவும் 330 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட சீனி 270 ரூபாயாகவும் கிழங்கு 150 ரூபாயாகவும் வெள்ளைப்பூடு 420 ரூபாயாகவும் 1900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் செத்தல் மிளகாயின் மொத்த விலை 1300 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது என்றார்.

## முன்னாள் ஜனாதிபதி 11ல் நாடு திரும்புவார்?



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எதிர்வரும் 11ஆம் திகதி நாடு திரும்பவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நாடு திரும்பும் கோட்டாபய, சிறிது காலத்தின் பின்னர் மீண்டும் தீவிர அரசியலுக்குள் வருவதா, இல்லையா என்பது குறித்து அவரது நெருங்கிய தரப்புகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள கோட்டாபயவுக்கு எதிர்வரும் 11ஆம் திகதி வரை அந்நாட்டில் தங்கியிருக்க சிங்கப்பூர் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அதன் பின்னர் அவர் இலங்கை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது . அதேவேளை கோட்டாபய நாடு திரும்பியவுடன், மிரிஹானவில் உள்ள அவரது தனிப்பட்ட இல்லத்திற்குத் திரும்புவார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இதேவேளை, கோட்டாபய மீண்டும் நாடு திரும்புவதற்கான சரியான நேரம் இதுவல்ல என, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அடக்குமுறையின் முன்னோடி சுதந்திரமாக நடமாடுகின்றார்

அடக்குமுறையின் தந்தையான மகிந்த ராஜபக்ஸ ஆரோக்கியமாக பொழுதை கடத்திக்கொண்டிருக்கிறார் எனவும் தெரிவித்தார். மனிதநேயத்தின் பெயரால் நாடு குறித்து சிந்தித்து ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டிய தருணத்தில், எதேச்சதிகாரமாக அரசியல் பழிவாங்கள்களில் ஈடுபடுவதை தான் வன்மையாக கண்டிப்பதாகவும், இந்த அரச பயங்கரவாதத்தை உடனடியாக நிறுத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார். கைது செய்யப்பட்டுள்ள தொழிற்சங்க தலைவர் திரு.ஜோசப் ஸ்டாலினை பார்வையிடுவதற்காக இன்று (04) கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு சென்ற சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் முகமாக எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாவதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது ஜோசப் ஸ்டாலின் தொடர்பில் கூறியிருந்ததை நினைவு கூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், அன்று அவர் கைது செய்யப்பட்ட போது ஜீ.எஸ்.பி வரிச்சலுகையை இழக்க நேரிடும் என்று கூறியிருந்தால், இன்று அது அவ்வாறு இழக்கப்படாதா எனவும் கேள்வி எழுப்பினார். வெடிகுண்டுகள், வாள்கள்,துப்பாக்கி ரவைகள் போன்ற ஆயுதங்களால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தற்போது வரை தொடரும் வன்முறைச் சுழற்சியை ஆரம்பித்தது முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஸவே எனவும் தெரிவித்தார். எந்தவொரு குடிமகனும் தான் கருதும் கருத்தைக் கொண்டிருப்பதற்கும்,அதற்காக முன் நிற்கவும், பேசவும், ஒன்று கூடவும், அமைதியான முறையில் போராட்டம் நடத்தவும் உரிமையுண்டு என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வன்முறையற்ற அகிம்சை வழியில் போராடும் உரிமையை யாராலும் மீற முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.ஜோசப் ஸ்டாலின் தனக்குள்ள உரிமைகளை நாட்டுக்காக ஜனநாயக முறையில் பயன்படுத்தினார் எனவும், அந்த உரிமையை எவராலும் எதிர்க்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

# 100 நாட்கள் செயல்முனைவின் 04 ஆவது நாள் போராட்டம் முல்லைத்தீவில்




**(சுமன்)**

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் நான்காம் நாள் போராட்டம் இன்று வியாழக் கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நடைபெற்றது. இப் போராட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்து அமைதியான முறையில் இப்போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தது.வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டின் வடக்கு கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்கள் தழுவிய ரீதியில் இச் செயல்முனைவு நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அத்தியாவசிய மருந்து பொருட்கள் வழங்கி வைப்பு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் மற்றும் பிரதித் தலைவர் மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் இணைந்து ஆரம்பித்துள்ள உயிர்காக்க மருந்து என்னும் திட்டத்தின் கீழ் மற்றும் ஒரு தோட்டப்புற வைத்தியசாலைக்கு அத்தியாவசிய மருந்து பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. அந்தவகையில் தலவாக்கலை வட்டக்கொடை மடக்கும்பரை தோட்ட வைத்தியசாலைக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் மயில்வாகனம் உதயகுமார் தலைமையில் இந்த அத்தியாவசிய மருந்து பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்மூலம் மடக்கும்பரை தோட்டம் மற்றும் வட்டகொடை தோட்டத்தை சேர்ந்த சுமார் 10க்கும் மேற்பட்ட பிரிவுகளில் வசிக்கும் 2000 ற்கும் அதிகமான மக்கள் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெரும்போக உணவு உற்பத்தி முன்மாதிரி விவசாயத்திட்டம்




**(ரக்ஸனா)**

"ஒன்றிணைவோம் நாட்டை கட்டியெழுப்புவோம்" பசுமைப்பயணம் பெரும்போக உணவு உற்பத்தி முன்மாதிரி விவசாயத்திட்டம் முதற்தடவையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாழக்கிழமை (04) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் கிராமங்கள் தோறும் விவசாய உற்பத்தி மையங்களை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டங்கள் மாவட்ட செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரான்டிக்ஸ் நிறுவனத்தின் முழு அனுசரனையுடன் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்திற்குற்பட்ட மதுராபுரம் கிராமத்தில் ஆலயத்திற்கு சொந்தமான காணியொன்றில் "ஒன்றிணைவோம் நாட்டை கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் பசுமைப்பயணம் பெரும்போக உணவு உற்பத்தி முன்மாதிரி விவசாயத்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் பங்கேற்று சிறப்பித்திருந்தார். நிகழ்வில் மாவட்ட விவசாய பணிப்பாளர் கரிகரண், பிரான்டிக்ஸ் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் விவசாயிகள் பொது மக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர். இதன் போது விவசாயத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் விவசாயிகளுக்கான விதைப் பருப்புக்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சண்முகா ஹபாயா வழக்கு - கல்லூரி அதிபர்பிணையில் விடுதலை

**(பாறுக் ஷிஹான்)**

திருகோணமலை ஷண்முகா இந்துக் கல்லூரியில் ஹபாயா அணிந்து சென்றமைக்காக தாக்கப்பட்டு வெளியேற்றப்பட்ட ஆசிரியை பஹ்மிதா ரமீஸ் பாடசாலையின் அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் கல்லூரி அதிபர் இன்று (4) இரண்டரை லட்சம் பிணையில் விடுவிக்கப்பட்டார். கல்வி அமைச்சின் எழுத்து மூலக் கட்டளைக்கிணங்க சென்ற பெப்ரவரி மாதம் 02ம் திகதி திருகோணமலை ஷண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு கடமையேற்பதற்காக சென்றிருந்த பஹ்மிதா றமீஸை கடமையேற்க விடாது பல குழப்பங்களை ஏற்படுத்தி, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து தனது சட்டரீதியான கடமையை செய்யத் தடுத்தமை என்ற குற்றச்சாட்டின் பெயரின் திருகோணமலை திரு ஷண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். நீதிமன்றால் அனுப்பப்பட்ட அழைப்பாணையினைத் தொடர்ந்து வழக்கு இன்று (4) திருகோணமலை நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதிபருக்கெதிராக குற்றச்சாட்டுப் பத்திரம் வாசிக்கப்பட்டது. இரு தரப்பு சட்டத்தரணிகளின் கடுமையான வாதப்பிரதி வாதங்களைத் தொடர்ந்து வழக்கு நீதிபதியினால் விசாரணைக்கு (வுசயைட) எதிர்வரும் டிசம்பர் மாதம் 1 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

ஆசிரியை பஹ்மிதாவுக்கு ஆதரவாக குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணிகளான் றதீப் அஹமட், ஹஸ்ஸான் றுஷ்தி, ஸாதிர் முகம்மட் மற்றும் எம்.எம்.ஏ.சுபாயிர் ஆகியோர் தெரிவாகி வருகின்றனர். குறிப்பிட்ட இவ்வழக்கில் அதிபர் லிங்கேஸ்வரியை நீதிமன்று குற்றவாளியாகக் காணுமிடத்து இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவை பிரிவுகள் 183 மற்றும் 184 இன் கீழ் சிறைத்தண்டனை கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஷண்முஹா ஹபாயா விவகாரத்தில் ஆரம்பம் தொட்டு குரல்கள் இயக்கம் பாதிக்கப்பட்ட ஆசிரியை பஹ்மிதா றமீஸ/க்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





"தேனாட்டில் கதிர்காமம் என புகழ்ந்து கூறும்
தாந்தாமலை சென்று சண்முகனை வழிபட்டால்
அல்லல்போம், தொல்வினைபோம் ஆன
செல்வமத்தனையும் இன்பமுடன் பெற்று இனிது வாழ்வாரே"

அனைத்து விதமான ஆலய வெண்கலப்பொருட்கள், வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

குணா மல்ரி சொப் மற்றும் உமா பென்சி ஹவுஸ்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022

## திருக்கொடியேற்றம்
## 22.07.2022 வெள்ளிக்கிழமை

## தீர்த்தோற்சவம்
## 12.08.2022 வெள்ளிக்கிழமை

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாரை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் – சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இரசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

## 22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்

## 12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்



விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த பங்காக திகழும் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்கில் ஒன்பதாவது அருட்சகோதரியாக நல்லாயன் சபையில் இணைந்து தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணம் அதாவது நித்திய வாக்குத்தத்தம் செய்து கொண்ட பேசாலையைச் சேர்ந்த திரு திருமதி தார்சீஸ் குலாஸ் தம்பதினரின் புத்திரி அருட்சகோதரி பிறேமி குலாஸ் அவர்களை பேசாலை சமூகம் புதன்கிழமை (03.08.2022) மாலை மாபெரும் வரவேற்பு நிகழ்வை மேற்கொண்டதுடன், இவ் அருட்சகோதரியை பேசாலையிலிருந்து இறைவன் தனது திராட்சை தோட்டத்தில் இறை பணிக்காகவும் சமூகப் பணிக்காகவும் அழைத்தமைக்காக கூட்டுத்திருப்பலியில் பேசாலை சமூகம் ஒன்றிணைந்து நன்றி திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும் தற்பொழுது தேசிய பாடசாலையாக விளங்கும் மன் பற்றிமா மகா வித்தியாலயத்தில் இவ் அருட்சகோதரி கல்வி கற்றபொழுது அவரின் சக மாணவர்களும் புனித வெற்றி நாயகி ஆலய பேரவையும் வாழத்துப்பாக்கள் பாடி பரிசில்கள வழங்கிய நிகழ்வையும் பேசாலை பங்குத் தந்தை அருட்பணி ஞானப்பிரகாசம் அடிகளார் உரையாற்றுவதையும் காண்கின்றீர்கள்.

# மட்டக்களப்புச்சாலை முகாமையாளராக சிறிதரன் நியமனம்

இலங்கை போக்குவரத்து சபை கிழக்கு மட்டக்களப்புச்சாலை முகாமையாளராக கந்தசாமி சிறிதரன் இன்று தனது கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். 2015 முதல் 2020 வரையான காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்து சபை மட்டக்களப்புச்சாலை பிரதி முகாமையாளராகவும் பின்னர் பதவியுயர்வு பெற்று இலங்கை போக்குவரத்து சபை கிழக்கு பிராந்திய நிர்வாக உத்தியோகத்தராகவும் பதவி வகித்து வந்த நிலையிலேயே குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்புச்சாலை முகாமையாளராக நேற்று (03) நியமிக்கப்பட்டுள்ளார்.



# மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகராட்சி ஆள்புல எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் 01 கிலோ கிராம் மாட்டிறைச்சியின் அதிகூடிய விலையாக 1600 ரூபா கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாட்டின் அசாதாரண சூழ்நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, கல்முனை மாநகர பிரதேசங்களில் ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சி 2200 ரூபாவுக்கு மேல் விற்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு, மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப், நாளை மறுதினம் 06ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந்த நிர்ணய விலையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி விற்பனையாளர்கள், புதன்கிழமை (03) மாலை, மாநகர முதல்வரினால் மாநகர சபைக்கு நேரடியாக அழைக்கப்பட்டு, இறைச்சி வியாபாரத்தின்போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் செலவீனங்கள் குறித்து கேட்டறியப்பட்டு, அவற்றுக்குரிய தீர்வுகள் முன்மொழியப்பட்ட நிலையில், அவர்களது இணக்கத்துடன் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 01 கிலோ கிராம் மாட்டிறைச்சி 1600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அதில் ஆகக்கூடியது 200 கிராம் மாத்திரமே முள் அடங்கியிருத்தல் வேண்டும் எனவும் அனைத்து இறைச்சிக் கடைகளிலும் டிஜிட்டல் தராசு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை மீறும் மாட்டிறைச்சி வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மாட்டிறைச்சிக் கடைக்கான வியாபார உரிமம் இரத்துச் செய்யப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, இறைச்சிக் கடைக்காரர்களுக்கு மாடுகளை விற்பனை செய்வோர் மாநகர சபையில் தம்மைப் பதிவு செய்து, அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஒரு கிலோ கிராம் இறைச்சியை ஆகக்கூடியது 1300 ரூபாப்படி வழங்க வேண்டும் எனவும் முதல்வரினால் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இதனை மீறும் மாடு வியாபாரிகள் பொலிஸார் மூலம் கைது செய்யப்பட்டு, கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் மாடுகளும் பறிமுதல் செய்யப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மாட்டிறைச்சி வியாபாரிகளுடனான இக்கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்து முதல்வர் ஏ.எம்.றகீப் கருத்துரைக்கையில், அம்பாறை மாவட்டத்தின் ஏனைய பல பிரதேசங்களில் மாட்டிறைச்சியானது 1200 ரூபா, 1400 ரூபா தொடக்கம் 1600 ரூபா வரை விற்கப்படுகின்றபோது ஏன் கல்முனையில் மாத்திரம் 2200 ரூபாவுக்கு மேல் அநியாயமாக விற்பனை செய்கின்றீர்கள் என்று விசனம் தெரிவித்தார். மிகவும் கஷ்டமான இக்கால கட்டத்தில் எமது மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்வதில் இவ்வளவு கொள்ளை இலாபத்தை ஈட்டுவது மனச்சாட்சிக்கு விரோதமாகத் தெரியவில்லையா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். நாட்டு நிலைமையை உங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நாளுக்கு நாள் உங்கள் இஷ்டம் போல் விலையைக் கூட்டிக்கொண்டு போவதை இனியும் அனுமதிக்க முடியாது. இறைச்சிக்கடைகளை இழுத்து மூட வேண்டியேற்பட்டாலும் பரவாயில்லை கொள்ளை இலாபத்தில் இறைச்சி விற்பதை அனுமதிக்க மாட்டேன் என்றும் முதல்வர் தனது நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தியிருந்தார்.

# நீரோடையின் பாதுகாப்பு அணை சேதம்

(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை கிறீன்ட் பீல்ட் குடியிருப்பு பகுதியை அண்மித்து காணப்படும் நீரோடையின் பாதுகாப்பு அணை மிகவும் மோசமான நிலையில் உடைந்து காணப்படுகின்றமையினால் இதனை உடனடியாக சீர் செய்யுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் குறித்த நீரோடைக்கு அருகிலுள்ள பாதுகாப்பு அணை உடைந்து காணப்படுவதனால் நீர் சென்று மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளதுடன் நிலப்பகுதி தாழ் இறங்கி காணப்படுவதுடன் அருகிலுள்ள வீதிக்கும் பாதிப்பு எற்படும் நிலையை அவதானிக்க முடிகின்றது.

சுமார் 400க்கு மேற்ப்பட்ட குடும்பங்கள், கல்முனை கிறீன்ட் பீல்ட் குடியிருப்பு பகுதியில் வசித்து வருவதுடன் அரச காரியாலயத்திற்க்கு வேலைக்கு செல்வோர், பாடசாலை மாணவர்கள்,விவசாயிகள் பொது மக்கள் என பலரும் நாளாந்தம் குறித்த நீரோடைக்கு அருகில் உள்ள வீதியை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் நீரோடை பகுதியில் கண்டல் தாவரங்கள் வளர்ந்து உள்ளதுடன் நீரோடைக்கு அருகில் வெற்று பிளாஸ்டிக் போத்தல்கள் குப்பைகள் உள்ளதையும் காண முடிகின்றது.

அத்துடன் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நீரோடையினால் அதிகமாக நீர் செல்லக்கூடிய நிலை உள்ளதுடன் மேலும் நீரோடைக்கு அருகில் உள்ள பாதுகாப்பு அணை மற்றும் வீதி என்பன மேலும் சேதமடையும் வாய்பு உள்ளது. இது தொடர்பில் கல்முனை பிரதேச அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நாவலடியில் கால பைரவர் சிலை பிரதிஷ்டை

(காரைதீவு நிருபர் சகா)

கதிர்காம காட்டு பாதையின் மத்தியில் நடுக் காட்டுக்குள் அமைந்திருக்கின்ற நாவலடி என்ற இடத்தில் கால பைரவர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கின்றது. சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் ஸ்ரீ சிவசங்கர் ஜி தலைமையிலான குழு அக்கால வைரவர் சிலையை கடந்த 22 ஆம் தேதி பிரதிஷ்டை செய்து வைத்தது. நடுக்காட்டிற்குள் இந்த பொருத்தமான சிலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டமை முக்கியத்துவம் வாய்ந்த து.

சங்கர் ஜீயுடன் ஆதித்தன் மனோகரன் மகேஸ்வரன் தியாகராஜா உள்ளிட்ட குழுவினர் அங்கு அப்பணியில் ஈடுபட்டார்கள். பாதயாத்திரையாக செல்லும் அடியார்கள் இக் காலபைரவர் சிலையை வழிபட்டு வருகிறார்கள். . மேலும் ,நாவலடியில் வெனிவல் தேனீர் மற்றும் பட்டர்கள் வழங்குவதற்கு சிவசங்கர் ஜீ குழுவினர் தங்களது முழு ஏற்பாட்டில் நிதியுதவியை வழங்கினார்கள்.

# மாணவர்களுக்கு உதவி

ந.குகதர்சன்

கிழக்கு மாகாணத்தில் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் கல்வி முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் சுவிஸ் உதயம் அமைப்பின் ஊடாக பல்கலைகழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர் களுக்கான உதவிகள் வழங்கு வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான நிகழ்வு மட்டு.ஊடக அமையத்தில் சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண கிளை தலைவரும் முன்னாள் பிரதி கல்வி பணிப்பாளருமான மு.விமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் பொருளாளரும் சமூக சேவையாளருமான க.துரைநாயகம், சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண கிளை செயலாளர் திருமதி ரொமிலா செங்கமலன் உட்பட பலர் கலந்துகொண்டனர். அமெரிக்காவில் உள்ள மண்டூரை சேர்ந்த பொறியியலாளர் க.சிவகுமாரனின் உதவியுடன் மட்டக்களப்பிலிருந்து இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான உதவிகள் வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. இதன்கீழ் முதல்கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட பத்து மாணவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளது. மாதாந்தம் அவர்களின் தேவையினை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் பொருளாளரும் சமூக சேவையாளருமான க.துரைநாயகம் தெரிவித்தார்.

# சுவர் வீழ்ந்து சிறுமி பலி

க.ருத்திரன்

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புணாணை பொத்தனை பகுதியில் நேற்று புதன்கிழமை வீட்டின் சுவர் விழுந்ததில் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பன்டார தெரிவித்தார். கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீள்குடியேற்றக் கிராமமான புணாணை பொத்தனையைச் சேர்ந்த உசனார் பாத்திமா றீமா என்ற மூன்றரை வயதுடைய சிறுமியே வீட்டின் சுவர் விழுந்ததில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தார். உயிரிழந்த சிறுமியின் வீட்டிற்கு அருகில் வீடு உடைக்கப்பட்டு ஒரு பக்கம் சுவர் மாத்திரம் காணப்பட்ட நிலையில் சீமெந்து கல் சுவர் ஓரத்தில் இருந்து மூன்று சிறுமிகள் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் தற்போது காற்று பலமான வீசி வரும் நிலையில் சுவர் தீடிரென சரிந்து விழுந்ததில் குறித்த சிறுமி உயிழந்துள்ளதுடன்இ மற்றைய இருவரும் தெய்வாதீனமான உயிர் தப்பியுள்ளனர். உயிரிழந்த மூன்றரை வயதுடைய சிறுமியின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காக வைக்கப்பட்டதன் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விருது வழங்கும் நிகழ்வு



( திருமலை தட்சா)

திருகோணமலை யுனைட்டட் லயன்ஸ் கழகத்தின் 2022ஆம் வருடத்திற்கான முதலாவது மாதாந்த கூட்டத்தின் போது விருதுகள் வழங்கும் நிகழ்வானது கழகத்தின் தலைவர் லயன் கே.றூபகரன் தலைமையில் அண்மையில் திருகோணமலையில் அமைந்துள்ள நியூ லக்ஷ ீரி ஹோட்டலில் சிறப்பாக இடம்பெற்றது.

இவ் விருதானது கடந்த வருடம் இக் கழகத்தில் ஆற்றிய சேவைகளுக்காக பலருக்கும் வழங்கப்பட்டதோடு, இக் கழகத்தின் முன்னாள் தலைவர்களான லயன் க.திருச்செல்வம், லயன் மருத்துவர் கிருஷ ான்தன் விசேடமாக கௌரவிக்கப்பட்டனர். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக. முன்னாள் கழகத் தலைவர் லயன் னுச. கிருஷான்தன், முதன்மைப் பேச்சாளராக மாவட்ட ஆளுநர் லயன் பி.ஜனரன்ஜன், சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட ஊடகவியலாளர் பொ.சற்சிவானந்தம் கலந்து கொண்டதுடன் கழக நிர்வாகி நுபெ. லயன் திருச்செல்வம், பொருளாளர் லயன் ரூபாகரன், கழக அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர். திருகோணமலை மாவட்டத்திலுள்ள 10 லயன்ஸ் கழகங்களில் இக் கழகமே கடந்த வருடம் திருகோணமலை பிராந்தியத்தில் 19 விருதுகளைப் பெற்று முதலிடம் பெற்றமையுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட பல கழக லயன் உறுப்பினர்களுக்கும் விசேட(கேடயம்) சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# குளவி குத்துக்கு இலக்கானோர் வைத்தியசாலையில்

(க.ருத்திரன்)

மட்டக்களப்பு வாகநேரி பெட்டைக் குளத்தில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் சிலர் குளவி குத்துக்கு இலக்காகி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் பிரதேசத்தில் உள்ள குளத்தில் மீன் பிடித்து தங்களது வாழ்வாதாரததினை மேற்கொண்டு வந்தனர்.வழக்கம்போல் நேற்று காலை (3) மீன்பிடிக்கச் சென்றவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது எங்கேயோ இருந்து வந்த குளவிக் கூட்டம் அவர்களை துரத்தி துரத்தி குத்தியுள்ளது. குளவியின் தாக்கத்தில் இருந்து தப்புவதற்காக குளத்து நீரினுள் மூழ்கியும், கொண்டு சென்ற துணிகளை போர்வையாக பயன்படுத்தியும் பிடித்த மீன்களை கைவிட்டு தப்பித்து பாதுகாப்பு பெற்றதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலையடன் தெரிவித்தனர். 3 சிறுவர்கள் உட்பட 6 பேர்கள் பாதிப்பிற்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# 10 ஆயிரம் பேருக்கு சித்தர்கள் குரல் அமைப்பின் அன்னதானம்

( காரைதீவு நிருபர் சகா)

சித்தர்கள் குரல் அமைப்பின் பத்தாயிரம் பேருக்கான அன்னதானம் நேற்று(4) வியாழக்கிழமை கதிர்காமத்தில் இடம்பெற்றுள்ளது. பத்தாயிரம் பேருக்கான இந்த அன்னதானத்தை சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் ஸ்ரீ சிவசங்கர் ஜி தலைமையில் அங்கு நடத்தினார்கள். சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் ,துணைத் தலைவர் மனோகரன், ஸ்தாபக தலைவர் சங்கர் ஜி அவர்களின் நிதி உதவியோடு மற்றும் மகேஸ்வரன், தியாகராஜா, றினோன், விவே ,சில்வா ஆகியோரின் துணையுடன் அங்கே அன்னதானம் வழங்கப்பட்டது.

# மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு தில்லை மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து இருபது நாட்கள் சிறப்புத் திருவிழாக்கள் இடம்பெறுவதுடன் 21ம் நாளான 10.09.2022 திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. மண்டூர் கந்தசுவாமி ஆலயமானது மட்டக்களப்பின் திருப்படைக் கோயில்களில் ஒன்றாக விளங்கினாலும் ஆகம நெறிசாரா பூசைகள் நிகழும் ஆலயங்களில் கதிர்காமத்தை ஒத்திருப்பதால் சின்னக்கதிர்காமம் என்று சிறப்பித்துக் கூறப்படும் புண்ணிய தலமாகும். மேலைத்தேய அந்நியர் ஆட்சிக்காலத்தில்இவ்வாலயத்தைஅவர்கள்அழிப்பதற்காக முற்பட்ட போது முருகப்பெருமான் குளவிப்படை கொண்டு அவர்களை தடுத்து நிறுத்தியதாக வரலாற்று ரீதியான கதையொன்றும் உள்ளது. மட்டக்களப்பின் முருகன் ஆலயங்கள் பொதுவாக கிழக்கு நோக்கியே அமைந்திருக்கும் இந்நிலையில் மண்டூர் முருகனுக்கு தெற்கு நோக்கிய பார்வை இருப்பது கவனிக்கத்தக்கது. இயம கண்டத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்கே இந்நிலை எனக் கூறப்பட்டாலும் கதிர்காமம் நோக்கிய பார்வையாக இதனைக் கருதமுடியும். வேண்டுவோர்க்கு வரமளிக்கும் மண்டூர் முருகப் பெருமானது உற்சவகால நிகழ்வுகளில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் கலந்துகொள்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நானுஓயா வீதியில் பாரிய மண்சரிவு



**தலவாக்கலை**
**பி.கேதீஸ்**

அட்டன் நுவரெலியா பிரதான வீதியின் நானுஓயா நகரை அண்மித்த பகுதியில் இன்று (4) ஏற்பட்ட பாரிய மண் சரிவினால் இவ்வீதியூடான வாகன போக்குவரத்து சில மணித்தியாலங்கள் தடைப்பட்டது மண்சரிவு காரணமாக நுவரெலியா,நானுஓயா,அட்டன்,தலவாக்கலை மற்றும் மெராயா வழியூடாக டயகம ஆகிய பகுதிகளுக்கான வாகன போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. இதனையடுத்து நானுஓயா பொலிஸார், நுவரெலியா வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து மண்மேட்டினை அப்புறப்படுத்தியுள்ளனர். இதனால் குறித்த வீதியுடனான போக்குவரத்து ஒரு வழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த வீதியில் நானுஓயா குறுக்கு வீதி மற்றும் பங்களாவத்தை பகுதியில் கடுமையான பனி மூட்டம் காணப்படுவதால் அப்பாதை வழியாக பயணிக்கும் வாகனச் சாரதிகள் முன்விளக்குகளை ஒளிரவிட்டு மிகவும் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறும் பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# பட்டப்பகலில் களவாடப்பட்ட ஆலய உண்டியல்

**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் உண்டியல் வியாழக்கிழமை(04) முற்பகல் சுமார் 10 மணியளவில் களவாடப்பட்டுள்ளதாக அந்த ஆலயத்தின் தலைவர் இ.ரமேஸ் தெரிவித்தார். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. வழக்கம்போல் ஆலயத்தின் தின பூஜை செய்வதற்காகச்வியாழக்கிழமை சென்ற அவ்வாலய குருக்கள் ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருந்த உண்டில் இல்லாமல் உள்ளதை அவதானித்துள்ளார். ஆலயத்திளன உட்புறத்தை சுற்றிப் பார்த்தவேளை ஆலயத்தினுள் வடக்குப்புறமாக குறித்த உண்டியல் உடைக்கப்பட்டு கிடப்பதை அவதானித்துள்ளார். பின்னர் ஆலய தலைவருக்கு அறிவித்துள்ளார். வழக்கமாக ஆலயத்திற்கு பகல் காவலாழி வைப்பதில்லை, கதிர்காம பாதயாத்திரிகர்கள் ஆலயத்திற்கு வந்து செல்வதனால் ஆலயத்தின் முன் வாயிற் கதவு பகலில் திறந்து விடப்பட்டுள்ளன. இந்நிலையில் வியாழக்கிழமை முற்பகல் வேளையில் யாரோ மிகவும் தந்திரத்தனமாதன முறையில் ஆலயத்தினுள் உட்புகுந்து முன்னால் வைத்திருந்த உண்டியலை எடுத்து ஆலயத்தின் வடக்குப் பக்கமாக கொண்டு வைத்து ஆலயத்திலிருந்த சூலத்தை எடுத்து உடைத்து அதிலிருந்த பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர். உண்டியலில் எவ்வளவு பணம் இருந்தது என்பது எமக்குத் தெரியாது. ஆனாலும் ஆலயத்தின் சொத்துக்களைத் திருடித் தின்பவர்களை தெய்வ பாவம் அவர்களை சும்மா விடாது. இவ்விடையம் குறித்து களுவாஞ்சிகுடி பொலிசாருக்கு நாம் அறிவித்துள்ளோம் என ஆலயத்தின் தலைவர் இ.ரமேஸ் மேலும் தெரிவித்தார்.

# வன்முறைத் தீவிரவாதத்தை தணித்தல் விழிப்புணர்வு நாடகம்







**(ரக்ஸனா)**

வன்முறைத் தீவிரவாதத்தை தணித்தல் தொடர்பான விழிப்புணர்வு. "இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தைத் தணித்தலுக்காக சமூகமட்ட அமைப்புக்களை திறன்விருத்தி செய்தல்" எனும் செயற்திட்டத்தில் வளவாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்று வருவதாக செயற்பாட்டாளர் எப்.எச்.எம். சர்மிலா தெரிவித்தார். இத்தகையதொரு விழிப்புணர்வு நிகழ்வு கிழக்குப்பல்கலைக்கழக கலை கலாச்சாரப்பீடத்தின் விரிவுரையாளர்கள் மாணவர்களின் உதவியோடு தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் மட்டக்களப்பு காத்தான்குடியை அண்டிய ஆரையம்பதி பகுதியில் வியாழக்கிழமை 04.08.2022 ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மண்முனைப்பற்று பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் என்.சத்தியானந்தியின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதேச செயலக அலுவலர்கள் பங்குபற்றினர். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் சு.சந்திரகுமாரின் ஆக்கத்தில் எழுதப்பட்ட இன ஒருமைப்பாட்டுக்கான விளையாட்டுக்களுடனும் பாடல்களுடனும் தெரு நாடகங்கள் இடம்பெறுகின்றன.

வன்முறையற்ற வாழ்வை வலியுறுத்த இது நடத்தப்படுகிறது என்று தகவல் பயிற்சி நிலையத்தின் தலைமை செயற்பாட்டு அலுவலர் பி. பெனிங்னஸ் தெரிவிக்கிறார். இந்நிகழ்வுகளைப் பார்வையிட பொதுமக்களும் வருகை தந்திருந்தனர். தேசிய சமாதானப்பேரவை ஹெல்விற்றாஸ் சிறிலங்கா ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் தகவல் பயிற்சி நிலையத்தின் ஊடாக இந்நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது.







"வேண்டுவார் வினைதீர்க்கும் வேலவன் வீற்றிருக்கும் தாந்தாமலைப் பதியை தானாடிச் சென்றிடுங்கால் தொல்வினைகள் தீர்த்து துயரங்கள் அகன்று இன்பமுடன் வாழ்வார் உலகில்"

தாந்தாமலை ஸ்ரீ முருகனுக்கு மகோற்சவப் பெருவிழா - 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

விளம்பர அனுசரணையாளர் : முத்துலிங்கம் அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# வாழைச்சேனை எரிபொருள் நிலையம் முன்னிலையில்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

தேசிய எரிபொருள் பாஸ் QR அமைப்பு நடைமுறையின் கீழ் எரிபொருள் வழங்கும் நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் மூலம் பொது மக்கள் இலகுவாக தமக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட எரிபொருளை சிரமமின்றி பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளதாக மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். அதனடிப்படையில், வாழைச்சேனை பொலிஸ் நிலைய சுற்று வட்டச்சந்தியில் அமைந்துள்ள கே.ஜீ.சோமஸ்காந்தன் எரிபொருள் நிலையத்தினூடாக மிகச்சிறப்பான முறையில் QR பாஸ் நடைமுறையினைப்பின்பற்றி 86.86 வீதம் என்ற அடிப்படையில் மாவட்டத்தில் முன்னிலை வகிக்கும் வகையில் மிகச்சிறப்பான முறையில் எரிபொருள் விநியோகத்தை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்தும் அரசாங்கத்தின் QR பாஸ் நடைமுறைகளைப் பின்பற்றி எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை மக்களுக்கு சிரமமின்றி முன்னெடுக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அனைத்து எரிபொருள் விநியோக நிலையங்களின் உரிமையாளர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார். QR பாஸ் திட்டத்தின் மூலம் நீண்ட வரிசைகள் மற்றும் மக்கள் கூட்டங்கள் சிரமமின்றி இலகுவாக அரச மற்றும் தனியார்த்துறைகளில் பணியாற்றுவோர் உள்ளிட்ட முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள், மதகுருமார்கள், விவசாயிகள் எனப்பல்வேறு தரப்பினர்கள் உள்ளடங்களாக அதிகமானோர் தமக்கான எரிபொருளை குறுகிய நேரத்துக்குள் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குடிநீர் தொகுதி மக்கள் பாவனைக்காக கையளிப்பு



எப்.முபாரக்

திருகோணமலை வெள்ளை மணல் நீரோட்டுமுனை பிரதேசத்தில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகம்மட் நௌபரினால் குடிநீர்த் தொகுதி புதன்கிழமை(3) பொதுமக்களின் பாவணைக்காக கையளிக்கப்பட்டது. திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட குடாக்கரை பகுதியில் சில பகுதிகளில் குடிநீர் பிரச்சினை காணப்படுவதாக அப்பிரதேச மக்கள், சங்கங்கள் மற்றும் நீரோட்டுமுனை அகரம் கல்வி நிலையம் ஆகியன திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகமட் நௌபர் அவர்களிடம் எழுத்து மூலமான கோரிக்கையினையும் முன்வைத்திருந்தனர். அதற்கமைய அன்நூரி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆழ்துளை குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் தொகுதி அமைத்துக் கொடுக்கப்பட்டது. இந் நிகழ்வில் கருமலையூற்று முஸ்லிம் வித்தியாலய அதிபர், அப்பகுதி முக்கியஸ்தர்கள், அன்நூரி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர், வெள்ளைமணல் விளையாட்டுக் கழக நிர்வாகிகள், அகரம் கல்வி நிலைய நிர்வாகிகள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# டீசலை பதுக்கி விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி செல்வா நகர் கிழக்கு பிரதேசத்தில் டீசலை பதுக்கி வைத்து கூடிய விலைக்கு விற்பனை செய்த நபர் ஒருவர் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 135 லீற்றர் டீசலையும்காத்தாங்குடி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக காத்தாங்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் ஆலோசனையுடன் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரஹீம் தலைமையில் மேற்கொண்ட விசேட சுற்றி வளைப்பின் போது இந்த டீசல் கைப்பற்றப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரையம்பதி செல்வநகர் கிழக்கு பிரதேசத்தில் டீசலை பதுக்கி வைத்து கூடிய விலைக்கு விற்பனை செய்வதாக காத்தான்குடி பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது இந்த டீசல் கைப்பற்றப்பட்டதாகவும் இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.




"தா" என்றால் "இந்தா" என்று வழங்கும்

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய

வருடாந்த மகோற்சவப் பெருவிழா 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!

விளம்பர அனுசரணையாளர் : தாந்தியான் வேதநாயகம் (முனைக்காடு)